அரசியலும் விமர்சனமும்

# ஜனநாயகம் - நல்லிணக்கம் - அபிவிருத்தி

**( கனக நமநாதன் )**

இந்த குறிக்கோள்களை அடைவதற்கே மாதுளுவேவ ஷோபித தேரர் 40க்கு மேற்பட்ட சிவில் சமுக அமைப்புக்களுடன் இணைந்து இலஞ்ச ஒழிப்பு ஊழல் ஒழிப்பு வீண் விரயம் தவிர்ப்பு போன்ற நாட்டுக்கும் சமூகத்திற்கும் நன்மை பயக்கக்கூடிய அரசியல் நிலைப்பாட்டை முன் நிறுத்தி மகிந்த ராஜபக்ஷாவையும் அவரது சர்வாதிகார குடும்ப ஆட்சியையும் முடிவுக்கு கொண்டுவர உழைத்து நல்ல முடிவையும் கண்டார். அவருக்கு உறுதுணையாக ஆரம்ப காலம் தொட்டே இருந்துவந்த அமைச்சரான ராஜித சேனரத்ன ரணிலை அணுகி இந்த முயற்சி பற்றி கூறியபோது சந்திரிக்காவையும் இணைக்க இணக்கப்பட்டது.

இந்த இரகசிய அரசியல் சுதுரங்க ஆட்டத்தில் அமெரிக்காவுடன் வேறு சில மேற்குலக நாடுகளும் அந்தரங்கமாக பங்குபற்றி செயற்பட்டு வந்திருந்தன. புலிகளின் அழிப்புக்கு பின்னர் சிறுபான்மையினரின் பிரச்சினைக்கு ஒரு நீதியான அதிகாரப் பகிர்வு முறைமையும் அத்தோடு சகல சமுகங்களையும் இணைத்து அபிவிருத்தி பாதையில் இலங்கை அரசு பயணிக்க வேண்டும். என்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது.

தமிழர்களைப் பொருத்தளவில் புலிகள் போராளிகளாகவும் அதே சமயம் சர்வதேச மனித உரிமை சட்டப் பார்வையில் பயங்கரவாதிகளாகவும் காணப்பட்டதால்தான் அமெரிக்கா உட்பட பல நாடுகள் புலிகளின் அழிவுக்கு ஆதரவை வழங்கியிருந்தன. இந்த எண்ண வெளிப்பாட்டுக்கு இந்தியா முன் நின்று செயற்பட்டது. அதன் ஒரு தலைவரை இழந்ததற்கு புலிகளின் பயங்கரவாதமே காரணமென நீதிமன்ற தீர்ப்பாய் இருந்ததும் பலராலும் கண்டிக்கப்பட்ட உச்சக்கட்ட பயங்கரவாத செயலாகி விட்டதாக உலகத்தால் கருதப்பட்டது. பின்னர் அதனை பிரபாகரன் ஏற்று வருத்தம் தெரிவித்ததும் அது ஊர்ஜிதம் ஆயிற்று. அரந்தலாவ இளம் பிக்குகளின் படுகொலை மற்றும் அநுராதபுர நகரத்தில் பயணிகள் பஸ் தரிப்பு நிலையத்தில் சாதாரண பொது மக்களின் மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம், தலதா மாளிகை புத்தர் கோவிலுக்கு சேதத்தை ஏற்படுத்தியது காத்தான் குடி பள்ளிவாசல் தொழுகை நடைபெற்ற போது செய்த கொலைகள் போன்றவையெல்லாம் உலகத்தின் மனித உரிமைப் பார்வையில் புலிகளை பயங்கரவாதிகளாக்கி விட்டிருந்தன.

இராணுவத்தை எதிர்ப்பது போன்று ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களை தாக்குதல் கொலை செய்தல், அரச சொத்துக்களை குறிவைத்தல் ஆகியனவற்றை பயங்கரவாத செயலாக சர்வதேசம் பார்க்க மாட்டாது. பொது மக்கள் பொது அமைப்புக்கள் மத வழிபாட்டு இடங்கள் போன்ற உரிமைப் போராட்டத்திற்கு சம்பந்தமில்லாதவைகளில் போராளிகள் தம் கைவரிசையைக் காட்டுவது தர்மப் போராகாது. நவாலி தேவாலயம் மீது விமானப்படை தாக்குதலுக்கு பழிக்குப்பழி என்று கூறுவது ஏற்கக்கூடிய காரணமல்ல. போராளிகள் பழிக்குப்பழி என்ற கவசத்திற்குள் புகுந்து தப்பிக்க முடியாது. போரை உருவாக்கியவர்கள் இயக்கங்களே. பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகி தோட்டாவை அரசுக்கு எதிராக பயன்படுத்தியவர்கள் போராளிகளே. வன்முறையில் ஈடுபடுபவர்கள் அரச வன்முறைகளையும் எதிர்கொண்டு தாங்கி சகித்து அரசுக்கு எதிரான போராட்டம் மட்டும் என்ற இறுக்கமான கொள்கைக்குள் கட்டுப்பட்டு புலிகள் போரை நடாத்தியிருந்தால் உலக நாடுகள் புலிகளின் அழிவை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள். ஏதாவது ஒரு வகையில் போர் நிறுத்தத்தை சாத்தியப்படுத்தி இருப்பார்கள்.

ஆகையால் போரினால் தமிழர்கள் நன்மை எதுவும அடையமுடியவில்லை. போர் முடிந்த பின்னரும் போரை அடக்கியவர் என்ற ஒரு சிங்கள தலைவர் தென்பகுதியில் உருவாக்கப்பட்டதால் முன்னர் இருந்த நிலமையிலும் பார்க்க கீழ் நிலமைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டிருந்தார்கள்.

மூலையில் ஒதுக்கப்பட்டிருந்த ஜனநாயக சுதந்திரத்தை மீண்டும் மிளிரச் செய்யவும் அதன் பின் போரினால் பிளவடைந்திருந்த சமூகங்கள் பழையனவை மறந்து ஒன்றிணைந்து செயற்பட அவர்ளுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் அதிலும் வெற்றி பெற்ற பின்னர் நாட்டை அபிவிருத்தி பாதையில் பயணிக்க தேரரின் கனவு இருந்தது.

நல்லாட்சியில் முக்கிமாக ரணில் தலைமையில் ஐ.தே.கட்சி 19வது அரசியலமைப்புத் திருத்தத்தை மிகவும் சிரமத்தினூடாக நிறைவேற்றி சுதந்திரமாக இயங்கும் ஆணைக்குழுக்களை உருவாக்கியது ஜனநாயகத்தை மீண்டும் தளைக்கச் செய்த செயற்பாடாகும். ரணிலினால் 2001ம் ஆண்டு முன்வைக்கப்பட்டு அதை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது போன தகவல் அறியும் சட்டத்தை நல்லாட்சியில் உருவாக்கி நடைமுறைப்படுத்தப்படுவது ஜனநாயக பாதை விரிவாக்கத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இச் செய்கைகளினால் சுதந்திரமாக இயங்கும் நீதி பரிபாலனம் கிடைத்தது. சுதந்திரமாக தேர்தல்களை நடத்த வழி கிடைத்தது. சுதந்திரமாக விசாரணை செய்யவும் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவும் பொலிஸ் ஆணைக்குழு அமைந்தது. பொதுச் சேவை கல்விச்சேவை போன்று வேறும் பல சேவைகள் சுதந்திரமாக இயங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பத்திரிக்கைச் சுதந்திரம் ஒன்றுகூடும் சுதந்திரம் முக்கியமாக பாராட்டப்படவேண்டிய சிறந்த ஜனநாயக வெளிப்பாடாகும்.

அடுத்து காணப்படுவது நல்லிணக்கம் என்ற இனங்களுகிடையிலான முரண்பாடுகளை கலைவதும் சிறுபான்மையினருக்கு முன்னைய அரசால் சுமத்தப்பட்டுள்ள வேதனைகளை நீக்குவதும் வருங்காலத்தில் சிறுபான்மையினர் பாதிப்படைய முடியாதவாறு தன்னாட்சி அதிகாரங்களை புதிய அரசியலமைப்பின் மூலம் ஸ்திரப்படுத்துவதும் நல்லிணக்கத்திற்கு தேவைப்பாடானவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் ஓரளவு நீங்கியிருந்தாலும் இன்னமும் பல முடிவுகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட வேண்டியுள்ளது. கைதிகள் விடுவிப்பு காணிகள் விடுவிப்பு காணாமல் போகப்பட்டவர்கள் கண்டுபிடிப்பு படைக் குறைப்பு போன்ற பல விடயங்களில் நல்லிணக்கம் ஏற்படத் தேவையுள்ளது. இவற்றை துரிதமாக செயற்படுத்த முட்டுக்கட்டை போட்ட 16 பேர்கள் அரசை விட்டு விலகியுள்ள நிலையில் சென்ற அரசால் சுமத்தப்பட்ட வேதனைச் சுமைகள் அகற்றப்படுவதற்கு வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

கடைசியாக ஆராயப்பட வேண்டீயது அபிவிருத்தி என்பதாகும். இதில் தர்ம சங்கடமான நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது. 13ம் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணங்களுக்கு கையளிக்கப்பட்ட விடயம் சார்பாக அதிகாரங்களுக்குட்பட்டதை மத்திய அரசு தானே தீர்மானித்து தனது அரச ஊழியர்களைக் கொண்டு அமுல்படுத்த முற்படுவது பிழையானதும் சட்டத்திற்கு முரணானதுமான செயற்பாடாகும். ஆனால் அதை இன்னொரு பக்கமாக சிந்திக்கவும் தேவையேற்பட்டுள்ளது. ஆண்ட ''பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை'' என்று கவிஞர் காசி ஆனந்தன் முன்னர் முழங்கினார். ஆனால் மாகாண சபைக்கும் பிரதேச சபைகளுக்கும் ஆட்சியையும் அதிகாரத்தையும் கொடுத்தும் ஆளத்தெரியாது தடுமாறும் இந்தப் பரம்பரை பற்றி எதுவும் கூறமுடியாதுள்ளது. இதற்கிடையே அபிவிருத்தியை எங்ஙனம் காண்பது. இலஞ்சம் ஊழல்கள் வீண் விரயங்கள் வட-கிழக்கிலும் இல்லாமலில்லை. அதற்கு எதிரான நடவடிக்கை தெற்கில் உக்கிரமாக எடுக்கப்படும் காலகட்டத்தில் வட-கிழக்கில் இலஞ்ச ஊழல்களில் சிக்கி அடையாளம் காணப்பட்டு பத்திரிக்கை செய்திக்குட்பட்டவர்களுக்கு எதிராக இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.